பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

05 09 2025    FRIDAY    12.40 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று தேசிய நல்லாசிரியர் விருதுகளை வழங்கினார்.

2. நாட்டின் முன்னேற்றத்தில் ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

3. இந்தியா – ஐஸ்லாந்து இடையேயான நல்லுறவு மேலும் வலுவடைந்துள்ளதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.

4. ரஷ்யா உடனான போர் முடிவுக்கு வந்தவுடன், 26 மேற்கு நாடுகளின் படைகள் யுக்ரைனில் நிறுத்தப்படும் என்று பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரான் தெரிவித்துள்ளார்.

5. தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று தேசிய நல்லாசிரியர் விருதுகளை வழங்கினார்.

ஆசிரியர் தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், தேர்வு செய்யப்பட்ட 45 ஆசிரியர்களுக்கு இந்த விருதுகளை அவர் வழங்கினார்.

தமிழகத்திலிருந்து சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த ரேவதி பரமேஸ்வரன், திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த விஜயலட்சுமி ஆகியோரும் குடியரசுத் தலைவரிடம் இருந்து இன்று இந்த விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

முன்னதாக, குடியரசுத் தலைவர் மாளிகையில், திருமதி திரௌபதி முர்மு, முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணனின் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தினார்.

<<<<<<>>>>>

நாட்டின் முன்னேற்றத்தில் ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் தினத்தையொட்டி இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மாணவர்களின் திறன் மற்றும் வாழ்வை மேம்படுத்தும் வகையில், அர்ப்பணிப்பு மிக்க கடின உழைப்பை அவர்கள் தந்து வருவதாக கூறியுள்ளார்.

எழுத்தறிவை கற்றுத்தருவதோடு, நாட்டின் பொறுப்புமிக்க குடிமக்களாக மாணவர்களை ஆசிரியர்கள் உருவாக்கி வருவதாக திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

வ.உ.சிதம்பரனாரின் 154-வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, தூத்துக்குடி துறைமுக வளாகத்தில் உள்ள வ உ சிதம்பரனார் சிலைக்கு மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதனையொட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியாவின் முதல் சுதேசி கப்பல் நிறுவனத்தை நிறுவியவர் கப்பலோட்டிய தமிழர் வ உ சிதம்பரனார் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டுப்பற்றுக்கு இலக்கணமாகவும், தியாக வாழ்வுக்கான எடுத்துக்காட்டாகவும் வ உ சிதம்பரனார் திகழ்ந்தார் என்று கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, சென்னை, திருச்செந்தூர் மற்றும் தூத்துக்குடியில் உள்ள வ உ சிதம்பரனாரின் திருவுருவப்படம் மற்றும் சிலைக்கு மாநில அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது

<<<<<<>>>>>

இந்தியா – ஐஸ்லாந்து இடையேயான நல்லுறவு மேலும் வலுவடைந்துள்ளதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் பயணமாக ஐஸ்லாந்து சென்றுள்ள அவர், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திருமதி Thorgerdur Katrin-னை சந்தித்து பேச்சு நடத்தினார்.

வர்த்தகம் மற்றும் முதலீடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மீன்வளத்துறை உள்ளிட்ட பல துறைகளில் இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தியதாக அமைச்சர் தமது சமூக வலைதள பக்கத்தில் கூறியுள்ளார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு ஐஸ்லாந்து கண்டனம் தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டிய அமைச்சர், அதற்காக இந்தியா சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா - Nordic பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் திரு கீர்த்தி வர்தன் சிங், அந்நாட்டு நாடாளுமன்ற தலைவர் உட்பட பல்வேறு தலைவர்களை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவித்துள்ளார். முன்னதாக, ஐஸ்லாந்தில் அமைந்துள்ள தூதரகத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்.

<<<<<>>>>>

சுதந்திர தினத்தன்று பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிய உரையில் சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

அதற்கேற்ப, கடந்த மூன்றாம் தேதியன்று சரக்கு மற்றும் சேவை வரி குழுமக்கூட்டத்தின் முடிவில், அவ்வரி தொடர்பான சீர்திருத்தங்களை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வெளியிட்டார்.

இதன்மூலம் புத்தகங்கள், பென்சில் உள்ளிட்ட கல்வி பயன்பாட்டுப் பொருட்களுக்கான வரி நீக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், இந்த சீர்திருத்தங்கள் கல்வி சார்ந்து பெற்றோர்கள் எதிர்கொள்ளும் நிதிச்சுமையை பெருமளவு குறைக்கும் என்று கூறினார். இதனிடையே, இந்த சீர்திருத்தமானது சிறு-குறு தொழில் நிறுவனங்களின் உற்பத்தியை அதிகரிக்க உதவிடும் என்று தமிழகத்தின் விழுப்புரத்தை சேர்ந்த தொழில் முனைவர் திரு சசிகுமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். ரக்கு மற்றும் சேவை வரி விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது, விசைத்தறி தொழில் புத்துயிர் பெற வழிவகுக்கும் என்று ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் திரு சுரேஷ் தெரிவித்தார்.

<<<<<>>>>>

ரஷ்யா உடனான போர் முடிவுக்கு வந்தவுடன் 26 மேற்கு நாடுகளின் படைகளை யுக்ரைனில் நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

யுக்ரைனுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் 35 நாடுகள் பங்கேற்ற கூட்டத்தின் முடிவில் இதனை பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரான் அறிவித்துள்ளார்.

இதன்படி, இந்த 26 நாடுகளின் படைகள் தரை, கடல், வான்வழியாக யுக்ரைன் நாட்டின் பாதுகாப்பை உறுதிபடுத்தும் என்று அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக பாரிசில் செய்தியாளர்களிடம் பேசிய யுக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி, இந்த விவகாரத்தில் அமெரிக்காவின் ஆதரவு குறித்து திரு டொனால்டு ட்ரம்ப் விரைவில் தமது முடிவை தெரிவிப்பார் என்று எதிர்பார்ப்பதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

யுக்ரைன் – ரஷ்யா மோதல் முடிவுக்கு வருவதையே இந்தியா விரும்புவதாக ஐ நா-வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு P. Harish தெரிவித்துள்ளார்.

ஐ நா பொதுச்சபையில் ஆற்றிய உரையில் இதனை குறிப்பிட்டுள்ள அவர், அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் மற்றும் ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புதின் இடையே அலாஸ்காவில் நடைபெற்ற பேச்சுவார்த்தை இந்த விவகாரத்தில் முன்னேற்றம் காண வழிவகுத்திருப்பதாகவும், அதனை இந்தியா வரவேற்பதாகவும் கூறியுள்ளார்.

யுக்ரைனில் அமைதி நிலவும் வகையில் அந்நாட்டு அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி, ரஷ்ய அதிபர், ஐரோப்பிய நாட்டு தலைவர்களுடன், பிரதமர் திரு நரேந்திர மோடி பேச்சு நடத்தி வருவதாகவும் திரு Harish தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப், வெள்ளை மாளிகையில் அந்நாட்டு தொழில் நிறுவன தலைவர்களை சந்தித்து பேச்சு நடத்தினார்.

செயற்கை தொழில்நுட்பம் சார்ந்த முதலீடுகளை அதிகரிப்பது குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டது.

இதில் மைக்ரோசாப்ட் அதிபர் திரு பில்கேட்ஸ், ஆப்பிள் நிறுவனத்தின் Tim Cook மற்றும் Google நிறுவனத்தின் சுந்தர் பிச்சை உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் டெஸ்லா நிறுவனத் தலைவர் திரு Elon Musk கலந்துகொள்ளவில்லை.

<<<<<<>>>>>

குஜராத் மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று அதிகனமழை முதல் இயல்புக்கு மாறான மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

மேலும், ராஜஸ்தான், கோவா, மத்திய மகாராஷ்ட்ரா, மத்தியப்பிரதேசம், சௌராஷ்ட்ரா, கட்ச் பகுதிகளில் கனமழை முதல் அதிகனமழை வரை இன்று பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

அந்தமான் நிக்கோபார் தீவுகள், ஜார்கண்ட், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

இலங்கையில் நேரிட்ட சாலை விபத்தில் ஒன்பது பெண்கள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர்.

Ella-Wellawaya சாலையில் பேருந்து ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-0, 6-4 என்ற செட் கணக்கில் ஜப்பானின் Leo Vithoontien -ஐ வென்றார்.

----------

ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டி சீனாவின் Hang Zhou-வில் இன்று தொடங்கியது.

--------------------

உலக Wushu சாம்பியன் போட்டியில் இந்தியாவின் கரினா, ஷிவாங்கி ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<END>>>>>